உடனடி வெளியீட்டிற்காக

# உலக வங்கி

தொடர்புகொள்ள வேண்டியவர்கள்: தில்லியில்: கீதாஞ்சலி சோப்ரா
(91 11) 2461-7241
இ-மெயில்: gchopra@worldbank.org
வாஷிங்டனில்: கரீனா மனேஷா (202) 473-1729
இ-மெயில்: kmanasseh@worldbank.org

## இந்தியாவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அவசர மறுசீரமைப்பு பணிகளுக்கு உலக வங்கியின் ஆதரவு

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் வீடுகளை மீண்டும் கட்டும் பணிக்கும் மற்றும் மக்களின் வாழ்வை புனரமைப்பதற்கும் உலக வங்கி நிதி உதவி வழங்கும்

வாஷிங்டன், மே 3, 2005 — டிசம்பர் 2004-ல் ஆசிய சுனாமியால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட தமிழ் நாடு மற்றும் புதுச்சேரியின் பகுதிகளில் மறுசீரமைப்பு மற்றும் புனரமைப்பு பணிகளுக்காக, இன்று, இந்தியா 465 மில்லியன் டாலர்கள் கடன் வசதி பெற்றது. இந்தியாவில் சுனாமி புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக உலக வங்கி உதவி அளிக்கும் 528.5 மில்லியன் டாலர்கள் மொத்த தொகையின் ஒரு பகுதியாகும் இது.

இந்த சுனாமி அவசர மறு சீரமைப்பு திட்டம் தமிழ் நாடு மற்றும் புதுச்சேரியில் பாதிக்கப்பட்ட 1,40,000 வீடுகளை மீண்டும் கட்டவும், அல்லது சீர்படுத்தவும் உதவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பொது கட்டிடங்கள் கட்டுமானப் பணி, மீன்வளம் மற்றும் வேளாண் தொழில்களை மீண்டும் துவக்கவும் இத்திட்டம் உதவிடும். மேலும் அதிக அளவில், வீடுகள் கட்டுமானப் பணியிலும், கரையோர நிர்வாகத்திலும் உதவி அளிக்கப்படும். முக்கியமாக, எளிதில் சேதமடையக் கூடிய கட்டிடங்கள் கட்டுவதில்லை என்ற அரசின் நோக்கத்தை இத்திட்டம் கருத்தில் கொண்டுள்ளது.

2004-ம் ஆண்டில் டிசம்பர் 26-ம் தேதி, ரிக்டர் அளவுகோலில் 9.0 என்று பதிவாகிய நில நடுக்கத்தை தொடர்ந்து ஏற்பட்ட சுனாமியால் இந்தியா, இலங்கை, தாய்லாந்து, இந்தோனேஷியா, மாலத் தீவுகள் உட்பட்ட பல நாடுகளின் கரையோரப் பகுதிகளில் பெருமளவில் சேதம் ஏற்பட்டது. இந்தியாவில், அந்தமான் நிக்கோபார் தீவுகள் யூனியன் பிரதேசத்திலும், ஆந்திரப் பிரதேஷ், கேரளா, தமிழ் நாடு, புதுச்சேரி யூனியன் பிரதேசம் ஆகியவற்றின் முக்கிய கரையோரத்தில் 2,260 கிலோமீட்டர் தொலைவு வரை பெரும் தேதம் ஏற்பட்டது. ஒரு மதிப்பீட்டின்படி 27 லட்சம் மக்கள் இதனால் பாதிக்கப்பட்டனர். பெரும்பாலானோர் (80 சதவிகிதம்) மீன்வள தொழில்களிலும், மற்றவர்கள் விவசாயம் (15 சதவிகிதம்) மற்றும் சிறு தொழில்களிலும் (5 சதவிகிதம்) ஈடுபட்டிருந்தனர். முன்பே வறுமையில் வாடிய இவர்களின் வாழ்க்கை முறையை, இந்த பேரழிவு மிக மோசமாக பாதித்துள்ளது. கரையோர சமுதாயத்தினர் எதிர்நோக்கும் பாதிப்புகளை இந்த பேரழிவு எடுத்துக்காட்டியது.

“சுனாமியால் இழந்த உயிர்களுக்கும், குறிப்பாக ஏழைகளுக்கு ஏற்பட்ட சமூக மற்றும் பொருளாதார பாதிப்புகளுக்கு, எந்த அளவு பணமோ உதவியோ ஈடுகட்ட முடியாது என்று கூறுகிறார். மைக்கேல் கார்டர், உலக வங்கியின் இந்தியாவிற்கான இயக்குநர். பாதிப்புகள் ஏற்படுத்தப்படக்கூடியவை மீண்டும் கட்டப்படாமல் இருக்கவும், வளர்ச்சிக்கான எல்லா அம்சங்களையும் ஆராயவும், இத்திட்டம் போன்று வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படவும், இந்திய அரசுடனும், மற்ற வளர்ச்சிக்கான கூட்டாளிகளுடனும், உலக வங்கி இணைந்து செயல்பட்டு வருகிறது.”

இத்திட்டம் 5 அம்சங்களை கொண்டுள்ளது:

- வீட்டு வசதி: தேவைப்படும்போது தற்காலிக இருப்பிடம் அளிக்கவும், தற்காலிக இருப்பிடங்களில் சேவைகளை மேம்படுத்தவும் இதன் மூலம் நிதி உதவி வழங்கப்படும். தற்போதுள்ள வீடுகளை சீர்படுத்தவும், மறுசீரமைக்கவும், புதிய வீடுகளை கட்டவும், இத்துடன் தொடர்புடைய தேவையான சேவைகள் மற்றும் முக்கிய சாலைகள், வழிதடங்கள், நீர் சப்ளை, கழிவிடம், மழைநீர் குழாய்கள், மின்சார வசதி போன்ற சமுதாய கட்டமைப்பு வசதிகள் மற்றும் குறிப்பிட்ட சில சமுதாய அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களை மீண்டும் குடி அமர்த்துவது போன்றவற்றிற்கு இந்த அம்சத்தின் கீழ் உதவி வழங்கப்படும்.

- தொழில் முறைகளை மீண்டும் ஏற்படுத்துவது: இதன்மூலம், சேதம் ஏற்பட்ட மீன்வள அடிப்படை கட்டமைப்பு, சேதமடைந்த விவசாய நிலங்களை சீர்படுத்தி இதற்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை சீர்படுத்தி பாதிக்கப்பட்ட குடும்பங்களின் தொழில்களை மீண்டும் ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கு நிதி உதவி வழங்கப்படும்.

- பொது கட்டிடங்கள் மற்றும் பொது வசதிகள்: சேதமடைந்த மருத்துவமனைகளை சீர்படுத்தி, புனரமைத்து நவீனப்படுத்துவது, பொது சுகாதார மையங்கள், துணை மையங்கள், கல்வி நிலையங்கள், புயல் இருப்பிடங்கள் மற்றும் மற்ற பொது கட்டிடங்கள் போன்ற சிறு பொது வசதிகளுக்காக உதவி அளிக்கப்படும். சேதமடைந்த நிதி மற்றும் ஏரிக் கரைகளை சீர்படுத்தி தமிழ் நாட்டில் கரையோர காடுகளை ஏற்படுத்தி, புகலிடங்கள் அமைக்கவும் உதவி வழங்கப்படும்.

- தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சி: வீடுகளின் கட்டுமானப் பணிக்கான தொழில்நுட்ப உதவிக்கு நிதி உதவி அளிக்கப்படும். விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்க, நிலம் நிர்வகிப்பு குறித்த சேவைகள், மறு குடியமர்த்தும் வரைபடங்கள் தயாரிப்பு மற்றும் இது தொடர்பான கட்டமைப்பு திட்டங்களுக்கு இதன் கீழ் உதவி அளிக்கப்படும்.

- அமல்படுத்த ஆதரவு: திட்ட நிர்வகிப்பு மற்றும் திட்ட அமலாக்கத்தின்போது ஏற்படக்கூடிய கூடுதல் செலவுகள், நிதி கணக்குகள், தர உத்தரவாதம் மற்றும் தொழில்நுட்ப கணக்குகள், திட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு சமூக மற்றும் சுற்றுப்புற பாதிப்பின் தொடர்ந்த மதிப்பீடுகள் ஆகியவற்றிற்கு இந்த அம்சத்தின் கீழ் நிதி உதவி வழங்கப்படும்.

“இந்த உத்தேச திட்டத்தின் பல அம்சங்கள் ஏழை மக்களுக்கு நேரிடையாக உதவிடும் என்றாலும், அரசின் மறுசீரமைப்பு திட்டத்தின் முக்கிய நோக்கம் என்னவென்றால் இதை வளர்ச்சிக்கான ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதுதான் என்று கூறுகிறார் ஷ்யாமள் சர்கார், உலக வங்கியின் மூத்த சுகாதார பொறியியல் வல்லுநர். பாதிக்கப்பட்ட மக்கள் மிக அதிக அளவில் பயன் அடையவும், கரையோர சமூகத்தினரின் பாதிப்புகளை பொதுவாக தீர்க்கவும், இத்திட்டம்

அமலாக்கப்படும் நேரம் வரை, மறுசீரமைப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள மற்றவர்களுடனும் அனைத்து ஏஜென்சிகளுடனும் உலக வங்கி நெருக்கமாக இணைந்து செயல்படும்”

இத்திட்டத்தின் மொத்த செலவு 682.8 மில்லியன் அமெரிக்க டாலர்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது, எதிர்பாராத செலவுகள் உட்பட்ட இதில், 465.0 மில்லியன் அமெரிக்க டாலர்கள் அல்லது மொத்த தொகையின் 68 சதவிகிதம், ஐ.டி.ஏ-யின் நிதி உதவியாக இருக்கும் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. சேவை கட்டணமான 0.75 சதவிகிதம் மற்றும் 35 வருடங்களுக்கான காலவரையறை உள்ளிட்ட பொதுவான ஐ.டிஏ-வின் விதிகள் இதற்கு பொருந்தும். மீதமுள்ள தொகையை இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு, புதுச்சேரி மாநில அரசுகள் வழங்கும்.

இத்திட்டத்துடன் கூட, சுனாமி பேரழிவு சீர்படுத்தும் நடவடிக்கைகளுக்காக உலக வங்கி மேலும் 63.5 மில்லியன் டாலர்கள் நிதி உதவி அளிக்கும். ஆந்திர பிரதேஷின் அத்தியாவசிய புனரமைப்பு பணிகள் (40 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) மற்றும் கேரளாவில் கிராமப்புற நீர் சப்ளை தேவைகளுக்கான (10 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) நிதி வசதிக்காக தற்போதுள்ள ஐ.டி.ஏ-வின் கடன் தொகை உதவிடும். தமிழ் நாட்டின் சாலை துறை தேவைக்கான (11 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) ஓரளவு செலவுகள், தற்போதைய ஐ.பி.ஆர்.டி கடனின் கீழ் அளிக்கப்படும். சுனாமி புனரமைப்பு திட்ட அமலாக்கத்தின் ஒரு பகுதியான, இதனுடன் இணைந்த சில நடவடிக்கைகளுக்காக 2.5 மில்லியன் டாலர்களின் டிரஸ்ட் நிதி ஒன்றும் வழங்கப்படும்.

அந்தமான் நிக்கோபார் தீவுகளின் புனரமைப்பு பணிகளுக்காக, இந்திய அரசு நேரடியாக நிதி வசதி அளிக்கிறது.

இந்தியாவில் உலக வங்கியின் நடவடிக்கைகள் குறித்து மேலும் தகவல் அரிய பாருங்கள்:
http://www.worldbank.org.in/

இத்திட்டம் குறித்து மேலும் தகவல் அறிய பாருங்கள்:
http://web.worldbank.org/external/projects/main?pagePK=104231&piPK=73230&theSitePK=40941&menuPK=228424&Projectid=P094513